




# யோகர் உவந்தருள் யோகமே!



யோகர் உவந்தருள் யோகமே! எந்தனோர்
பாகம்நீ! என்பாவம் போக்கி,வந்த - சோகத்தை
நீக்கிமகிழ் சாயிபக்தை நீ!உயிர்நீ சித்திதரும்
ஆக்கம் அளித்தது உன் அன்பு!

- ஸாயிப்ரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நேரிசை வெண்பா

புன்னகை பூத்திடும் பூவிதழும், பூழியர்கோன்
இன்னல்தீர் வெண்ணீறு ஈதலும் - இன்பூட்டும்
செம்பவளச் சொல்லழகும் சிந்தைகவர் சீர்நோக்கும்
என்பாவம் தீய்க்கும் எளிது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலிவிருத்தம்

குருநானும் பார்த்திடக் குற்றமில்லை, எனினும்
திருமணப் பொருத்தத்தை தயக்கமின்றிப் பிள்ளையார்முன்
ஒருமனதாய்ப் பூக்கட்டி 'ஓம்' என்ற புனிதவாக்கால்
அருள்புரிந்த யோகநாதா! அதுவுமுன் ஆசியன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சினத்தைச் சிரிக்கவைத்த சின்னத்தங் கைநீ !
மனத்தினது மாசுநீக்கி, வாழும் - இனத்தோரை
ஒன்றுசேர்த்து இன்பமூட்டி அன்பிலாழ்த்தி சாய்மடி
சென்றுநீ சேர்ந்தாய் சிரித்து !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பினோர் வாழ்வாரே நன்கு!

## நேரிசை வெண்பா

ஓய்ந்த ஒருவனாய் ஒன்றும் அறியாவிச்
சேய்நின் சிறுவன்பாச் செப்பவே _ தாய்தந்தை
தம்மை யொருமுறை தாள்பணிந்து மாங்கனிகொள்
நம்நாதா நற்காப்பு நல்கு.

சற்குருவாய் வந்துதித்த சத்யசாய் பாபாவின்
பொற்பதங்கள் நாளும்நாம் போற்றிவரச் - சிற்றுளத்தில்
மட்டற்ற அன்புகூர் மாமய அச்சுதனாம்
புட்டபர்த்தி ஞானம் புகும்.

சிறியேன் தமிழ்நூலில் சென்றறியேன் செஞ்சொல்
அறியேன் அறிஞர் அவையில் - செறியாத
புல்லறிவுக் கேன்கலைதேர் பேரறிஞர் முன்புசெல்லாச்
சொல்தரவே வந்தசிறு மை.

சீர்பதி வாழும் சிவரூபச் செம்பொன்னை
ஓர்நொடி தானும் ஒரேபரனாய்ப் - பார்முழுதும்
பார்த்திடின் வேரற்றுப் பாவங்கள் கூரிழந்தே
சூர்ப்புற்றுச் சாகும் சுழன்று.

சாய்முருகா மால்மருகா சற்குருவே உன்னையான்
தாய்உருவாய் ஆழ்ந்தே தரிசிப்பேன் - தூய்பிறையைச்
சூடிய கூர்த்தன்முச் சூலத்தான் சேயாகப்
பாடியே சேர்வேன் பணிந்து.

சத்திய சாம்பவி சாரங்கி சாமுண்டீ
சத்சித்தா னந்ததேவி சங்கரியே _ நித்தியமாம்
உத்தமியே ஓங்காரி ஊர்மிளையாய்க் காண்கின்றேன்
சக்தியே பூத்தருள்வாய் சற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்க்குணன் நிர்ச்சிந்தன் நித்தியன் நிக்கிரகன்
நிர்மலன் சற்குணன் நீலவண்ணன் - சர்ப்பத்தில்
நர்த்திக்கும் சாரங்க நாதனாய்ச் சார்வோமே
பர்த்தீசன் பாதம் பணிந்து.

மண்ணில் உழைப்பது மாண்பாம் மனம்விரும்பும்
பெண்ணினைக் கொள்ளின் பெருமகிழ்வாம் - உண்பதுடன்
கண்நிறையத் தூங்குவதும் கைநிறைந்த செல்வமெல்லாம்,
கண்ணன்தாள் எண்ணக் கசப்பு.

நாளும் உருவேற்றி நாதன்தாள் போற்றிவர
மூளும் வினையும் முடிவுறுமே _ கோளும்தம்
ஆளும் பிடிநீக்க ஆனந்தம் பொங்கியெழ
நாளுமே காணும் நலம்.

பாதங்கள் தாமேசெம் பங்கயங்கள் பாபாவின்
கீதங்கள் பாவம்தீர் கீதையாம் - கோதில்லா
வேதங்கள் சிந்தும் வெகுவாய் இதுகேட்டு
பேதங்கள் ஓடும் பெயர்ந்து.

எங்கும் எதிலும் எழுந்துள்ளார் எம்சாயி
கங்குல் பகலற்றோர் கண்ணனிவன் - சங்கரன்
சங்கரிவி நாயகன் சண்முகனாய்க் காண்பரே
பங்கமில்லாப் பக்தர்கள் பார்

சும்மா யிருக்கச் சுகம்கிடைக்கு மென்பதே
பெம்மானைப் பற்றும் பெருமொழியாம் - எம்பாபா
செம்பாதம் பற்றிடும் செப்புநன் மந்திரத்தை
நம்பினோர் வாழ்வரே நன்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று உணர்ந்தேன் இனிது!

## நேரிசை வெண்பா

மெய்தனைத் துய்யாது மேதினியில் எங்குமே
பொய்தனை மெய்யாகப் பேணியும் - உய்யும்
வழியுமே விட்டு வருந்தியுமே நொந்தேன்
அழிதேகம் கட்டி அணைத்து.

அழகு வழிய அசைந்து வருவாய்
பழகு தமிழில் பதில்கள் - மழலை
மொழியில் அமிழ்தாய் மொழியக் கருணை
விழியோ பொழியும் விருந்து

கண்ணீர்த் துளிகள் கவின்மலராய்ப் பூத்திடும்
எண்ணங்கள் ஒன்றாகி ஓம்ஆகும் - வண்ண
வடிவழகா! சாயிதேவா! வாமனாவுன் பார்வை
படிந்திட்ட போததன் பின்பு.

பார்வையோ ஒன்று பலபாடம் போதிக்கும்
ஓர்உணர்வில் ஒன்றி ஒளிர்விக்கும் - சீர்பர்த்தி
வாழ்சிவனே யான்நின்னை வாழ்த்திப் பணிந்துபக்தி
ஆழ்ந்திடச் செய்வாய் அருள்.

உன்னருகில் யானா? உரைப்பபொய் என்றுணர்ந்தேன்
என்னுள் உயிராம் எழில்உருவே _ பொன்நாணும்
நின்பாதம் என்நெஞ்சில் நின்றே உறைவதையான்
இன்றே உணர்ந்தேன் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்முகம் காட்டும் எனக்கு

## நேரிசை வெண்பா அந்தாதி மாலை

எனக்குள் இருக்கும் எனதுமுகம் தேடி
சனத்துள் திரிதல் சரியோ _ தனக்குள்ளே
தன்னையே காணின் தரணியெங்கும் காண்உயிர்கள்
ஒன்றனவே உள்வாய் உணர்ந்து

உணர்ந்த முனிவர் உலகை அளந்தோன்
குணம்தான் அறிவரோ கூறும் - வணங்கியே
வாய்நிறையப் பாடுவீர் வாழ்த்துவீர் வாடிடும்
நோய்கள் முழுதும் நொடித்து

நொடிக்குள் நினதுமுகம் நெஞ்சினில் என்றும்
அடிக்கடி தோற்றும், அலைக்கும் - பிடிக்குள்
அகப்படாது யாவையும் ஆண்டவன் தாளில்
உகப்புவெறுப் பின்றிப்போட் டோது.

ஓதிப் பழக ஒளிர்முகம் ஒன்றாக
ஆதி பகவன் அடிசேரும் - தீதிலாச்
சோதி சுடர்விட்டுச் சோபிக்கும் ஆங்குவீடு
வீதியில்லை வெட்டவெளி காண்.

காண்பவை யாவுமே கண்கொள்ளாக் காட்சியாம்
ஆண்பெண்ணாங் கில்லை அனைத்துமே _ காண்பாய்
இறைவன் செயலன்றி ஏதுமில்லை யாவும்
நிறைவாய் அறிவாய் நினைந்து

நிறைந்துமே நெஞ்சம் நெகிழ்ந்துருகும் உள்ளே
மறைந்துமே விஞ்சும் மனதும் - இறைநாட
இன்னுணர்வு கூட்டும் இதயம்வாழ் சாய்பகவான்
இன்முகம் காட்டும் எனக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதிக்கத் துதிக்க விதியும் வளையும்!

தூய மௌனம் துயர்தீர்க்கும் வேதம்
தீயவை தொலைக்கும் தீக்கனல் தோற்றும்
மாயையும் மறையும் மகத்தான
நேயத்தால் நெஞ்சினில் நிம்மதி நிலவுமே!

கும்பிடக் கும்பிடக் குறைகள் குறையும்
நம்பிட நம்பிட நம்பிக்கை நிறையும்
வெம்பி வெம்பி வருந்திட
எம்பிரான் சாய்அருள் எளிதில் கிடைக்குமே!

பிறந்தது தெரியும் இறப்பது புரியும்!
சிறப்பான வாழ்வே சீரிய பண்பாம்!
துறப்பதே சுகத்தின் திறப்பென
அறிந்தவர் ஆத்மா உணர்ந்தவர் ஆவரே!

மதிக்க மதிக்க மாண்பு விளையும்
துதிக்கத் துதிக்க விதியும் வளையும்
மிதிக்க மிதிக்க மண்கண்,சாய்
பதியின் தோற்றம் படிந்து திகழுமே!

உழைத்தோம் பிழைத்தோம் உண்டோம் புரண்டோம்
விளைந்தவை விதைத்தவை புதியவை,பின் பழையவை
இளமை முதுமை இறைவன்
உளமே! எமக்கு இனிதாம் களமே!

ஈன்றோர் ஆன்றோர் நோன்பு நோற்றோர்
சான்றோர் சித்தர், அடியார் ஆசிகள்
சான்றென அறிவாய்! சகத்தினில்
தோன்றி முடித்தாய் தியாக வாழ்வையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய் நாமம் - சாவிற்கு நாமம்

தாயாய் தந்தையாய் உறவாய் இறையாய்
ஓயா துந்தனை ஏற்றிவாழ், அறியாச்
சேயாம் சிறியேன் சாய்ராம் சொலத்தினம்
நீயாய் நெஞ்சிருந்து நல்லருள் நல்குவாய்

அஞ்சேல் எனஅப யம்அளித்தோன் ஈர்பாதம்
நெஞ்சினுள் வைத்துளந் நாளுமே - வெஞ்சினம்
வஞ்சகம் யாவும் விரட்டத் தினம்ஸாய்ராம்
துஞ்சலின்றிச் சொல்லவருள் தா!

காலமென் செய்யும் கவர்காலன் என்செய்வான்
ஞாலமெய்ஞ் ஞானிநாடும் நம்பாபா - காலடியில்
தூலம் மறந்து தினம்ஸாய்ராம் சொல்லிவரக்
காலர்கள் செல்வர் கவிழ்ந்து.

நினைக்க நினைக்கராம நாமம்எம் நெஞ்சை
நனைத்து நனைத்து நரம்பு - அனைத்துள்ளும்
தீந்தேனாய் பாய்ந்துகொல் துன்பம் துடைத்து
சாந்தம் தரும்தண்செஞ் சொல்.

யாவும் மறந்திடு யாவும் துறந்திடு
நாவில்சாய் நாமம் நிறுத்தியே - பூவாய்த்
தொடுத்துத் தினம்பூசை செய்திடச் செய்பாவம்
படுத்திடும்உள் பூத்திடும்நாற் பண்பு.

யாவும் இழப்பினும் யாக்கை அழியினும்
சாவு நெருங்குமுன் சாயீசா - நாவினில்நின்
நாமம் நிலைத்திட நெஞ்சு நினைத்திட
தாமதம் இன்றியருள் தா.

துறக்கத் துறக்கஎன்மேல் தொற்றுது பற்று
மறக்க முயன்றும் மறுத்து - இறுக்கிப்
பிடிக்கும் செருக்கைப் பிடிக்குள் சுருக்கி
நொடிக்குள் நெருப்பினுள் நெட்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்திட வேண்டியதை சேர்க்க மறந்திட்டேன்
பார்த்திட்ட காட்சிகள் பார்த்துமே - கோர்த்திலேன்
போர்த்தினவு கொண்டபெரும் பொல்லாக் குணங்களைத்
தீர்த்தருள்வாய் முற்றும் தகர்த்து!

ஒன்றை நினைத்திடு என்றுமே ஒன்றான
நன்றைப் பதித்திடு நன்றான - குன்றை
ஒருவிரலில் ஏந்திய எம்கோபால் சாயி
திருத்தாள் பணிவீர் தினம்!

செய்தவை எத்தனை செய்பவை எத்தனைநாம்
செய்திட வேண்டியவை சாய்நாமம் - மெய்யுருகி
நாள்முழுதும் நாவினால் உச்சரித்து என்றும்உன்
தாள்முன் விழுமருள் தா!

ஞானிகள் வேண்டிய ஞானக் குருவாக
மேனிதாங்கி பர்த்தியில் வானவர் - மோனவர்
வாழ்த்தி வணங்கிடச் சத்திய சாயியாய்
வாழ்சிவ வாழ்வே வளம்!

சுற்றிவரும் மாசு சுழன்றுகிளர் ஆசைகள்
தொற்றிமகிழ் பாசங்கள் தற்பெருமை - மற்றும்
அனைத்துமே ஆத்மாவை விட்டகற்றிப் போற்றும்
அனைத்தும் இணைத்திடுவாய் இன்று!

வாசகர் அல்லன்நான் வாதம்செய் சுந்தரர்
நேசமிகு சம்பந்தர் நாவேந்தர் - பாசமிகு
தொண்டரும் அல்லன்யான் திண்டாடும் அற்பனைத்
தொண்டுசெய்ய வைப்பாய் தொடர்ந்து!

ஆழ்வாரும் அல்லேன் அடியாரும் அல்லேன்யான்
வீழ்ந்தும் வணங்கிலேன் வீம்பினில் - வாழ்ந்துளேன்
ஆழ்ந்து படித்திலேன் ஆணவம் பூண்டுளேன்
மாழ்ந்திடமுன் ஞானத்தீ மூட்டு!

தள்ளிவிடு துள்ளியெழு உள்ளமறி உள்ளத்தால்
பள்ளிகொள் பர்த்திநாதன் பாதங்கள் - உள்ளன்பு
வெள்ளத்தால் கள்ளமின்றி மெள்ளமெள்ள நீராட்டும்
பிள்ளையாய்ப் பாசுரம் பாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடி மெலிந்து வருந்தி அழைக்கின்றேன்
கூடி மகிழ்ந்திடநற் கூட்டமொன்று - தேடிச்
சேர்ந்திடச் சோர்வகற்றித் தேர்ந்து தெரிந்திடச்சாய்
ஓர்கரம் காட்டும் ஒளி!

ஆடுவதும் நீதானே! ஆட்டுவதும் நீதானே
கூடுவதும் தாண்டிக் குதிப்பதும் - பாடுவதும்
தேடுவதும் தோன்றுவதும் யாவுமான யாதவசாய்
வீடுசேர்ப்பாய் வெய்வினைகள் தீர்த்து!

பக்தியும் யுக்தியும் புத்தியும் தந்தெனக்கு
முக்தி தருவாய்என் மூலவனே - சக்தியும்
நீயே! சகலதும் சர்வமும் நீதானே!
நாயேன் நினதா யுதம்!

எங்குமொலி எங்குமொளி எங்கும்ஓம் எங்கும்நீ
திங்களில்லை அங்கமில்லை தூக்கமில்லை - எங்கும்
எதுவுமில்லை எண்ணமில்லை வண்ணமில்லை யாதும்
அதுவும்நீ அன்புருவும் நீ!

எங்கெங்கு நோக்கினும் உந்தன் திருமுகம்
அங்கங்கே உந்தன் திருவடி - செங்கரனே
எங்கெங்கும் கேட்குது உந்தன் திருநாமம்
பொங்கிப் பெருகுதேசாய் அன்பு!

நீலகண்டன் மைந்தா நெருப்பினில் பூத்திட்ட
காலரூபா நின்கரத்தில் காவல்செய் - சூலமேந்தும்
நெற்கொழுசாய் வைரவா! நாயாய் வலம்வரநின்
நற்பதம்ஊ ரிக்காட்டில் நாட்டு!

சக்திமிகு தெய்வம்நீ சந்நிதியின் சாமிநீ
பக்திசெய் பக்தருக்குப் பாசமுடன் - முக்திதரும்
சொக்கமிகு தேவன்நீ! சொக்கர் மகனும்நீ
இக்கணமே துக்கம் அகற்று!

உறுப்போ கறுப்பு உளமோ வெளுப்பு
அறுமுகம் அண்ணன்நீ ஒன்றை - அறுத்துமே
நான்முகன் ஆக்கியோன் நாரணன் நல்மருகன்
ஆனைமுகன் தம்பி அறி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கடந்திட ஞாலம் கிடந்திட
ஓலம் தொடர்ந்திட சாலம்செய் - தூலம்
மெலிந்திட மூலம் நினைந்திடச் சூலம்
பொலிந்திட வந்தருள்சாய் பா!

ஆல மரத்தின் அகத்துள் அமர்ந்தருள்செய்
மால்சேர் சிரம்கொய்சாய் வைரவா - சூலமே
காலமெல்லாம் கைதொழுதுன் கோலம் கருத்திருத்தி
சீலமுடன் வாழவழி செய்!

கேட்பதைக் கொட்டிமகிழ் கோணவளை சாய்துர்க்கே
வேட்பு வெறுப்பின்றி மெய்தவத்தார் - நாட்தினம்செய்
பற்றுவினை தீத்தருள்வாய் புட்டபர்த்தி சாய்மாவே!
நற்றுணை செய்வாய் நமக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சா’ மடி, ‘சாய்’ மடியோ!

மனைவியுடல் வாழ்மனை விட்டுமே ஏக
நினைத்து நினைத்துளன் நெஞ்சு - நனைந்து
அனைத்தும்யான் விட்டிட ஏங்கியழும் வேளை
எனைத்தேற்ற வந்தருள்வாய் ஈங்கு!

என்மனமே தன்மனமாய் என்றென்றும் ஏற்று,இன்
அன்பை அறத்தை அணிகலனாய் - புன்சிரிப்பைப்
பொன்னகையாய் பேணிநற் பண்புடன் வாழ்‘யோவை’
நன்னிலத்தார் நேசித்தார் நன்கு!

புற்றுநிறை ஊர்வாழ்ந்த பர்த்தீசன் பார்த்திட
புற்றுநோய்ப் பூமியில் என்செய்யும் - பெற்றிட்ட
ஆசிகள், பார்த்திட்ட அன்பான பார்வைகள்
மாசுகள் தீர்க்கும் மருந்து!

பிறப்பில் பிழைப்பால் சேர்த்திட்ட சொத்து
இறப்பில் வருமா இணைந்து? - சிறப்பு
இரண்டையும் கானலாய் எண்ணிநம் சாயி
இரண்டுதாள் பற்றல் இனிது!

சாய்மடி சாய்ந்தவளே! சாமடிநின் சாய்மடியோ
தீயவை தீண்டாத தூயவளே - நேயவளே
நோயின் கொடுமையிலும் நோவின்றி வாழ்ந்திட
மாயோன்சாய் நாமம் மருந்து!

வாழ்ந்திட்ட வாழ்க்கை வளம்நிறைந்து மேம்பட்டும்
தாழ்ந்திட்ட மக்கள் தரமுயர்த்த - சூழ்ந்துவாழ்
நன்மனத்தோர் செல்வாக்கை நன்கு பயன்படுத்தி
முன்னேற வைத்தநன் முத்து!

சின்ன வயதினில் மென்தோள் அழகினள்
நன்நிறை சிந்தையாள் நாத்தெளிவு - சொன்னசொல்
மாறாத நன்னடத்தை மாறாச்சாய் நம்பிக்கை
சேறில் மலர்ஞானச் சேய்!

துன்பங்கள் கண்டும் துவழ்ந்து கலங்கிடாள்
இன்பங்கள் கூடினும் இன்முகம் - தன்மனம்
கொஞ்சமும் மாறாத கோபமில்லா மங்கையவள்
நெஞ்சினில் என்றுமிலாள் நஞ்சு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிவேண்டாள் சச்சரவு வேண்டாள்,வீண் சந்தேக
நீதிவேண்டாள்! நிம்மதிகாண் நன்னடத்தை - சூதில்லா
நன்மனத்தில் சத்தியசாய் நாமம் சுரந்தொலிக்க
இன்முகம் காட்டும் இறப்பு!

எம்மை இறப்பிலும் ஒன்றாக ஏற்றிட
எம்முன் வருவது என்றென - அம்மையாய்
அப்பனாய் அன்புசொரி சத்திய சாயீசன்
எப்போதும் சொலார் இனி!

சனிக்கிழமை காலையில் சாய்ந்தவாறு கஞ்சி
இனி,இனிப்பு இல்லாக் கசக்கும் - கனிகளும்
வேண்டாம், மருந்துகளும் வேண்டாம், எனமீண்டும்
மீண்டும் உரைத்தாள் மறுத்து!

வருந்தி வருந்தி உருக்கி உருக்கித்
திருத்தித் திருத்திச்செந் தீயுண் - பெருத்த
உடலுள் உறையும் உயிரை உணரத்
திடம்கொண்ட சாய்மனதைத் தா!

அழுது அழுது உளத்துள் உழுது
உழுது தொழுது தொழுது - குழுவாய்ப்
பொழுது பொழுதாய்நற் பக்தியுடன் வாடித்
தழுவியே விட்டாள்சாய் தாள்!

திருவடி நீட்டித் துயரத்தைத் தீர்க்க
ஒருவடி உச்சியில் வைத்து - விரும்பிய
முக்தி விரைவில் தருவாய் திருமகள்செய்
பக்தியும்சாய் தந்த பரிசு!

தொழவைத்துத் தோத்திரம் பாடவைத்துத் தாள்முன்
விழவைத்து விம்மிவிம்மி எம்மை - அழவைத்து
மோனம் தவிர்த்து மனமடக்கும் தூயமெய்
ஞானம் தருவாய் நிறைந்து!

கெஞ்சினேன் கொஞ்சினேன் அஞ்சுவது ஏன்தானோ?
நஞ்சென்ற எண்ணமோ? நாவினைப் - பஞ்சால்
துடைத்துமே துப்பினாள் தூரவே என்செய்வேன்!
உடைந்தது எங்கள் உளம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்போறேன் நீவா சரிந்தவாறு சொல்லியவள்
ஊனுடல் சூட்டில் உணர்வினில் - தோன்றிற்று
மாற்றம்! மனைவி மனைவிட்டே கும்காலம்
ஈற்றில் பிரிந்தாள் இனிது!

சாயிநீ தந்திட்ட யோகம் தரணியில்
தேய்ந்துமே தொய்ந்தது! தந்தையாய்த் - தாயாகச்
சேயாய் இருந்தவள் சாய்மடியில்! எப்போது
நாயேன் திருவடியில் நல்கு!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று மணித்துளியில் மரணத்தை முடித்தாய்!

இளமையில் இணைந்தாய்! இனித்திட மலர்ந்தாய்!
உளத்தினில் உயிர்த்தாய்! உயர்சுகம் ஈந்தாய்!
தளம்புதல் தவிர்த்தாய்! திறம்பட வாழ்ந்தாய்!
துளசியாய் துளிர்த்துத் தூய்மையாய் திகழ்ந்தாய்!
வளத்தில் நிறைந்து வாழ்வினில் சிறந்தாய்!
அரசியல் வாழ்வில் அன்பறம் வளர்த்தாய்!
மரண மெண்ணி மயங்கா மனத்தாய்!
திருமணம் தொடர்ந்து இளகுமி தயத்தாய்!
இருமனம் ஒழித்தோர் மனத்தாய் இருந்தாய்!
குடித்துப் புகைத்த கணவனை தடுத்துப்
பிடித்து நிறுத்தி போற்றி மகிழ்ந்தாய்!
மாமியர் விருப்புமிகு மகளாய் மிளிர்ந்தாய்!
பலரும் மதித்திடும் பண்பினில் மிதந்தாய்!
கங்கையில் புதையினும் கரையாப் பாவம்
மங்கையின் மார்புமேல் விழுந்தழ மாசுகள்
மங்கி மறைந்திட மனைவிநீ மன்னித்தாய்!
தானம் கொடுத்திடத் தவித்திடும் குணத்தாய்!
சினத்தவர் கண்டு சினத்தைச் சினந்தாய்!
ஆனந்தன் மனதில் அண்ணியாய் அமர்ந்தாய்!
கற்றிட வந்தோர் காக்கும் காவல்தாய்
பூவும் பொட்டுடன் பிரிந்தாய்! பொலிந்தாய்!
யாவும் விட்டு யான்உடன் விண்வர
சாவினை கொடுத்துச் சாந்தி கொடு - தாய்!
மூன்று மணித்துளியில் மரணத்தை மணந்தாய்!
ஆன்றோர் வியந்திட ஈன்றோர் மகிழ்ந்திட
உனைநான் ஏந்திட, என் யோ(கம்)வே!
ஆன்மாவைச் சாய்மடி இணைந்திடச் சேர்ந்தாயோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா! அம்மா! அம்மா!

அகிலமே உச்சரிக்கும் அன்பின் அடையாளம்
அன்னை மடியின் சுகமே மனிதன் கண்ட முதல்
சுகம்! அவள் தந்த முத்தமே - என்
கண்ணீரைத் துடைத்த முதல் முத்தம்
அவள் தந்த உதிரமே என் பிஞ்சு
இதழ்களை நனைத்த முதல் பன்னீர்!

பட்டுப் போன்ற அவள் கைகளுக்குள் பரவசமாய் நான் தூங்க தன் தூக்கத்தைத் தொலைத்தவளை இன்று நிரந்தரமாய் தொலைத்துவிட்டு தூக்கமின்றி நான் துவழ்கிறேன்.

எவ்வளவு பொறுமை, எவ்வளவு சகிப்புத் தன்மை, இத்தனைக்கும் நடுவில் புத்தம் புது மலராய் என்றும் மலரும் அந்த வாடாத புன்னகை! என் அம்மாவின் சிரிப்பில் நான் மறப்பதுண்டு.

எங்கள் அடுப்புகள் அணைவதில்லை - அணைத்துப் பரிமாற என் அம்மா இருக்கும்போது!
அண்டியவர்கள் அயலவர்கள் அப்பா அம்மா அற்றவர்கள் யாவரையும் பாரபட்சமின்றி பசியாற்றும் அம்மாவின் பாசத்தால், எங்கள் அடுப்புகள்கூட சிவந்து சிரித்து நிற்கும்.

சின்னதாய்க்கூட சினக்கத் தெரியாதவர். அதனாலேயே என்னவோ அத்தாய்க்கு உரிமையாய் அவர் பெயரில் கோவில் கட்ட வேண்டுமென்கிறார்கள்.

ஆனால் எங்கள் அம்மா கண்ட தெய்வமோ எங்கள் அப்பாதான்!
கணவரைப் பிள்ளையாய் நண்பனாய் எங்கள் அப்பாவையே துதித்தார்! தொடர்ந்தார்! அவர்கள் வாழ்க்கை எங்களுக்குப் பாடமாகியது - பக்கங்களைத் திறந்த போதெல்லாம்!

அவர்கள் வாழ்ந்த விதம் வழிகாட்டியாக மாத்திரமல்ல, வியப்பாகவும் இருக்கக் கற்றுக் கொடுத்தது.

கண்ணகியைப் பார்த்ததில்லை! சீதையையும் கண்டதில்லை! சீராக வாழ்ந்த எங்கள் அம்மாவே அந்தக் கற்புக்கரசிகளை எங்கள் முன் நிறுத்தி வைத்தார்.

சிலம்பை உடைத்தாள் ஒருத்தி! தீயைத் தாண்டினாள் இன்னொருத்தி! கணவன் சொல்லைத் தாண்டேன் என்பதை உணர்த்திட கசப்பு என்று தெரிந்தும், கணவன் பரிகாசமாய் வேப்பிலையை உண்ணுவாயா எனப் பலர் முன்னிலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க - பதிவிரதை தான் என பட்டென வாங்கி பிரசாதம் என ஏற்று மற்றவர் யாவரும் வியக்கும் வகையில் வெற்றிலையாய் விரும்பி மென்ற விதம் - திகைக்க வைத்தது! நாம் பேறு பெற்றோம் இப்படியொரு அம்மாவைப் பெற்றதற்கு!

வாழ்வில் எத்தனை கதாபாத்திரங்கள் - அன்னையாய், மாமியாய், அன்பு சொரியும் அம்மாவாய்!

எக்கணத்திலும் அவள் யாரையும் சினந்ததில்லை! சிரத்தையுடன் சீராட்டிப் பாராட்டத் தெரிந்த அவர்களுக்கு சினம் என்பது வந்தில்லை! சினத்தை அவர்கள் அறிந்திருப்பார்களோ, என்னவோ!

சுந்தர முகத்தோடு சுற்றிவரும் அவர்கள் பின்னால் - சுற்றமே சூழ்ந்து நிற்கும்! சூதுவாது அறியாத சுடர்விடும் சொக்கத்தங்கம் அவள்!

எத்தனை நல்ல ஆன்மாக்களின் ஆசிர்வாதம் அவர்களுக்கு! சுடலைச் சுவாமி முதல் யோகர் சுவாமி, குடைச்சாமி என்று - இறுதியில் பகவான் பாபா வரை அவர் பெற்ற ஆசிர்வாதங்கள், அனுக்கிரகங்கள் எத்தனை எத்தனை!

பெண்களைக் கண்டு விலகி நிற்கும் சந்நியாசிகள்கூட இந்தப் பதிவிரதையின் கையால் பிடிசோறு வாங்கி உண்ட நாட்களும் உண்டு! சொல்லில் அடங்காது அவள் புகழ்!

அம்மா! உங்கள் நினைவுகள் என் மனதில் இல்லை. என்னை நினைக்க விடாமலே என் அருகிலேயே நீங்கள் வாழ்வதை நினைக்கிறேன். உங்கள் ஆசிர்வாதத்தை என்றென்றும் வேண்டி நிற்கும்,

அன்பு மகன் 'சூட்டி'
**து. மணிசேகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு என்றும் தெய்வம்!

அம்மா!

நான் அறிய உங்கள் கன்னத்தில் முத்தமாரி பொழிந்தது உங்கள் சீவன் பிரிந்த நாள் அன்றுதான். என்னைத் தாங்கிய - எந்தன் சின்ன உடலை - உந்தன் பொன்னுடலை அணைத்ததும் அன்றுதான்.

உங்களைப் பிடித்தது மாறாத நோய் - தீராத வேதனை. எப்படியம்மா தாங்கினாய்! எப்படியம்மா தூங்கினாய்! நானோ சதா ஏங்கியவாறு இருந்தேன். இருந்தும் நீ நோயின் வேதனையை சற்றும் காட்டவில்லை. உன் புன்சிரிப்பு தவழத் தவறவில்லையே! உடலாலும் உள்ளத்தாலும் - மிக மிக உறுதியானவள்!

சத்திரசிகிச்சை செய்த மறுநாள் ஒரு பத்துப் பதினைந்து அடி எடுத்து வைக்க முடியுமா என வினவிட, டாக்டரிடம் இருபத்தைந்து நிமிடங்கள் வோக்கரில் நடந்து காட்டி strong lady என்ற பாராட்டும் பெற்றாய்.

எம்மை விட்டு ஏன் பிரிய விரும்பினாய்? மரணத்தைக் கண்டு நீ அஞ்சியதை நான் காணவில்லை. அப்படிச் சொல்லியதாகவும் எனக்குத் தெரியவில்லை. மரணம்கூட மணம் மிக்கது என்று கதைத்துள்ளாய். நீங்கள் யாருக்காகவேனும் ஏற்க விரும்பினீர்களோ!

'நான் உடம்பன்று. ஆத்மா' என்று உங்கள் தந்தையும் - மாமனாரும் அடிக்கடி சொல்வதைக் கேட்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டாயா?

என் அம்மா எதற்கும் அதிகம் ஆசைப்பட்டவர் அல்ல. மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்விப்பதில் ஆசைப்பட்டு வாழ்ந்தவர். உறவினர்கள் அன்பளிப்பாகத் தரும் பணத்தைக்கூட அவர்கள் பெயரில் அன்பளிப்புச் செய்தவரல்லவா நீங்கள்!

சாயி மடிமீது சேர்ந்த என் அம்மாவுக்கு - அன்னையே! எமக்கு என்றும் தெய்வம்நீ!

அன்புள்ள செல்ல மகன்
**செல்வசேகரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைச் சிரிப்பு

அண்ணியின் முகத்தில் - சினத்தை மருந்துக்குக்கூட காணமுடியாது. அவர் முகத்தில் எந்நேரமும் புன்னகை மலர்ந்து கொண்டே இருக்கும். பலராலும் பாராட்டப்பட்டு - போற்றப்பட்டு வந்தவர்.

பாரபட்சம் இல்லாமல் - யாவருக்கும் உணவு சமைத்துப் பரிமாறுவதில் வல்லவர். என்னை மூத்த மகனாகக் கருதி - உணர வைத்துத் குழப்படியை குறைக்க வைத்தவர். இருப்பிட வசதி இல்லாதவர்களுக்கு - படிப்பதற்கு - இருப்பிட வசதி அமைத்து - நன்மதிப்புப் பெற்றவர்! எதையும் எதிர்பாராது படிக்க வரும் பிள்ளைகளின் படிப்பையும் கவனித்து - உணவும் அளித்து - பண்பாடு தவறி நடக்காது - பாதுகாத்தவர். அண்ணனைச் சாந்தமாக்குவதில் அண்ணி கைதேர்ந்தவர்.

'அண்ணி' என்பதை அறவே மறந்து - 'அன்னையுமாக' எமக்கு முன்னே வலம் வந்தவர். அவர் ஒரு அற்புதமான தாயார்!

என் அப்பாவே என்னைப் போற்றும்படி - படிக்கவும் - பண்பாகவும் வளர - வளர்த்தவர். என் அன்னைக்கு அடுத்தபடியாக திகழ்ந்தவர்.

கனடா வரும் வேளைகளில் அவரைக் கண்டு அளவளாவுவதில் இதயம் மகிழ்வுற்றேன்.

அவரின் இறுதிக்கால நிகழ்வில் பங்குபற்றினேன். அந்த முகத்தில் அந்தப் புன்னகை. உயிருடன் கண்ட அதே உயிர்ச் சிரிப்பு, சிரிக்கும் உணர்வு.

வந்தவர்கள் பார்த்தவர்கள் பழகியவர்கள் யாவரும், அவரிடம் அதே சிரிப்பை அன்று கண்டதுபோல இன்றும் காண்பதாகவும், நாளையும் அப்படித்தான் காண்போம் என்றும் கூறியது, கூற்றுவன்கூட அவரை அன்புடன் கூட்டிச் சென்றுள்ளான் என்பதை கூறாமல் கூறுகிறது.

அவர் என்றும் எனக்குள் உயிருடன் சிரித்தவாறு அமர்ந்து இருக்கிறார்.

நோயுற்ற காலத்திலும்கூட வாய்க்கு உருசியான உணவு கொடுக்க விரும்பிய உன்னத தாய்மையின் சிரம் - சிகரம்!

சாய் மடியில் - சேய் ஆகி சாய்பிரியன் குடும்பத்திற்குள் மீண்டும் வந்து சேவை செய்வாயாக!

**ஆனந்த்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் மெச்சிய திருமகள்

ஏழு மாமிகள் ஒன்றாகச் சேர்ந்து, புகழ்ந்த சிறந்த மருமகள் - திருமகள் நீங்கள்!
நாம் மூன்று மருமக்களும் விரும்பி மகிழும் இனிய மாமி!

ஆசையுடன் உணவுகளைச் சமைத்து தருமாறு கேட்பாய். அப்படித் தந்தால் தொட்டு ருசி பார்த்துவிட்டு - சரி செய்து மாமாவுக்கு உண்ணக் கொடுப்பாய்.

ஆசைப்படாத நீங்கள் - ஆசைப்பட்டு, ஆசைப்பட்டதை உங்கள் கணவருக்குக் கொடுத்து மகிழ்வீர்கள்!

பணத்திலும் ஆசையில்லை, நகையிலும் ஆசையில்லை, உணவிலும் ஆசையில்லை! ஒரேயொரு ஆசை - உந்தன் கணவன் நன்றாக ருசியாக உண்ண வேண்டுமென்பதே! ஆறு வருடங்கள் இரவும் பகலும் உங்கள் நிழலாக இருந்தவர்க்கான ஆசை.

சூழ்நிலையை அனுசரித்து பேசிப் பழகும் உங்கள் குடும்ப தந்திரம் - மாமாவின் சினம் அடக்கும் மந்திரம்.

என்றும் எப்போதும் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை. பொன் நகைகள் கழுத்தில் கூடும் குறையும். புன்னகை மாத்திரம் என்றும் குறைந்ததில்லை.

எம் மூவர் வீட்டிலும் முறைமுறையாக வந்து வாழ்ந்து, எம்மை மகிழ்ந்திடச் செய்து, மூன்று மணித்துளிக்குள் மரணத்தை புன்னகைத்து மௌனம் ஆக்கினாய்.

உங்கள் பார்வை எமக்கு என்றும் ஒளியூட்டட்டும்!

உங்களைப் போன்ற மாமியாக நாமும் அமையுமாறு எங்கிருந்தாலும் வாழ்த்துங்கள்!

**உங்கள் மருமக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Endrenrum Punnagai

There exists a certain eeriness in silence. A kind of peace, tranquility and beauty. Amidst that beauty was my grandmother. She is a quiet woman; very soft-spoken, kind, caring, helpful, with a breathtaking smile, but above all...she was relentlessly resilient. Her unwavering strength during the toughest years of her life, and her unconditional love for my grandfather, amongst the love for her three sons is something I have witnessed my entire life. Unequivocally, she would always be the last one standing, the last one eating food after everyone has finished, and to me, the last of her kind who embodied the epitome of what it meant to be a loyal wife, a loving mother but an unbelievable and unbeatable grandmother. However, she was always the first who deemed it necessary to endure all those positions of being the "last one". That is who she was. "Was"; a term we use for the past, for something that is 'no more', a word I dreaded my entire life when it came to my family. So instead I want to say she still is. That is who she is. It may have been the times in which she was born and raised in that made her be self-sacrificing woman. Nevertheless, she did not know how to be any other way, other than making sure everyone else's needs were taken care of before her own.

Ammama is otherworldly, a kind of enigma that I could not solve. I never understood how that soft-spoken and quiet woman could be brimmed with an incredulous amount of vitality. She was hell-bent on making sure her grandchildren were taken care of. "பிரியா பாலைக் குடி" Or she would say "ஜாம் போத்தலுக்குள் கையை வைக்காதே ! அம்மாட்ட சொல்லுவன் !" She would whisper over the phone and make sure Amma found out every bad thing I did. The irony was if she ever did something silly and I asked her about it, she would turn her head around and look back at me, her face all coy with a childlike mischief written all over and say "அம்மம்மாதானே !"

I remember as a child, every day she would sit me down and force me to learn my times tables. We started each morning in the summer, from two to fifteen, till eventually I could recite the entire book by myself for her. I remember hating it. Math was never my strong suit, but she never gave up. Until I got it, she would wait and wait encouraging me to finish. She was like that with everything though. When she taught me how to read and write Tamil she made me go over and repeat each letter, the sounds they made, forcing me to perfect my pronunciation. She taught me how to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

read the names of animals, colours, daily objects, constantly sounding out each letter alongside with me. One day that turned into reading and finally forming sentences. Sentences became paragraphs, paragraphs became whole pages, and those pages turned into books. She had such a knack for progression and helping other with that momentum. There was no room for reverting when it came to us in her life; I always had to move forward. I call that determination. Her determination to instill in us the values of what makes a person good, and her determination to fight this long fight. In the words of Tennyson:

As one who feels the immeasurable world,
Attain the wise indifference of the wise;
Her autumn into seeming-leafless days—
Draw toward the long frost and longest night,
Wearing her wisdom lightly, like the fruit,
Which in our winter woodland looks a flower.

In an autumn with no leaves and in a long drawn out winter, Ammama is like a spring flower that blooms amidst the cold. She breaks against the surface of the first frost, and will not stop growing, till the warmth and good days come. This woman taught me about what it meant to have patience, and to learn to let go of hatred. She taught me to appreciate the little things in life, for they will not come again. Today, I want to leave you with this from Elisabeth Edwards. Within the chaos, "she stood in the storm, and when the wind did not blow her way, she adjusted her sails".

I love you forever and always Ammama.

## Priya Yohaseharan




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Dearest Ammama

Ammama... Yogambikai... Joe. Appapa always called Ammama Joe, as a short, sweet nickname. Joe, short for jyoti? Light. The oil lamp we light before we pray to God, the sun's first brightest rays that awaken us in the morning, the beautiful soft eyes of my grandmother, all radiate the same, warm, divine light. She had lived with me for almost 20 years of my life, and from the moment I could recognize her as my grandmother, until her dying days, those eyes were still so beautiful... so real.

I laugh and smile a lot (so I've been told by many), usually maintaining a pleasant face. When I think about it, my whole family is that way. But, the woman with the most softness, most glowing, most pleasant smile would have to be my Grandma. Every time I think of that smile, it brings me back to the days when I was between 4 and 16 years old, where I can vividly remember her smile that softened my heart all the time. She would always call me to eat or to drink milk and I remembered always getting annoyed as a teenager because I would tell Ammama that I wasn't hungry or thirsty, but she would always insist! She would then come peek into my room and warmly ask me to eat again, and with that beautiful smile she always flashed, who could say no?

Being born in Canada, I know my Tamil may not be as perfect as I would like for it to be, but a lot of people say that it is very good, when I speak. But what many don't know is that I also know how to read and write Tamil. At 9 years of age, Appapa and Ammama both spent a lot of time with me during my summers off, to teach me how to read and write the language and I could not have been more thankful and grateful for that.

I am very proud to know my language and because of them, I will be able to teach my future children and preserve our culture and values as much as I can. This was all due to Ammama's patience. This unwavering patience that made learning so much fun... I could never forget that mature patience she always exuded, whether it was towards me, or towards her husband, or her children or to anyone. I'm sure that patience is also what made Ammama so easy to love and look up to.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ammama, I don't know how you got married at the age of 16, and learned as much as you did throughout your life, all by yourself. You knew how to raise your children, you knew how to handle Appapa, but more importantly, you knew the meaning of sacrifice. You sacrificed a lot, and even through any hardships that came your way, you graciously used your smile to tell everyone that you were always fine. The sincere love you showed everyone, the heartfelt way you embraced everyone, the gentle words you spoke to everyone, will never be forgotten. I remember all of those things, more than the time you fell sick.

My Ammama went through a lot of hardships after being diagnosed with her illness. It changed her... sometimes she was irritable, sometimes she would not speak. Through those forgiving eyes, I saw pain and longing. Longing to get better. I saw questions in those eyes, about why this was happening to her, and then I could no longer look into those beautiful eyes anymore, because I had no answers. If I looked into those eyes for too long, my eyes would have begun to water. Every time I looked into her pining eyes, I couldn't imagine what she was really going through. Her smile was gone too. But not completely.

One day when I stayed overnight with her at the hospital, I was talking to her about my future. Then she talked to me about my childhood. She told me that when I was a little girl, I did not like to drink milk and sometimes I would leave for school without drinking my milk. "You left without drinking your milk! Bad girl", she said. I started laughing and then I saw her smile... I saw her smile several times when I spoke about things that made her happy about my future, and my heart would light up just like her eyes.

My grandparents' relationship could be full of quarrels and bickering to some, but behind those quarrels was the deepest love that I have ever seen. In fact, in some ways it reminds me of myself. Both of them, equally could not live without one another! Ammama, even during her sickest, dying days, would still continue to ask Appapa whether he had eaten or not, or had gotten the food he liked to eat and always put his needs before hers.

Every time, every day, every minute. Her dying words were that she was going to go, and that he should come after. Appapa's still living, but living through Ammama's memories, the poems he had written for


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

her, and the dreams in which Ammama comes and goes. God decided her time was done on this earth, all for good reason, and so now, I live appreciating these beautiful memories of such a wonderful woman that I was privileged enough, to call my Ammama.

Ammama, you will always, in some way, be a part of my life: my past, present, and future. I don't know where anyone goes after death, but what I do know is that you will never leave my heart. You will always be remembered, but most importantly, you will always be truly loved, because true love and benevolence was something learned from you.

**Your Loving Rums**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையும் பிதாவும்



மாமியும் மாமாவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அம்மா ராசி இல்லாப் பிள்ளை!

அம்மா! அம்மா! யோகமாதாவே!
சாயிப் புலவன் வரைந்த உயிர்க் காவியமே!
தாயே உன் கருவறை வாசம் அறியாப்பிள்ளை
என்னை மூத்த மகனே என்று அழைத்தாய்
மணிகுல யோகசேகரர் உனது தம்பியர்
உன்னுடன் எனக்கு மக்கள் நால்வர்
சொன்னவள் நீயே! அழைக்கின்றேன் தாயே!
விம்மி மனம் வெதும்பி விழிநீர் கடலாக
அம்மா! அம்மா! என்று கூவி அழைத்தேன்
என் தெய்வமாதா நீ வரவில்லை
நான் அம்மா ராசி இல்லாப் பிள்ளை!

எந்தை என்பதா!
உன்உயிர் தமிழ் தந்த தந்தை என்பதா!
இவர் துப்பிய தமிழ் ஏந்திப் பருகிட
காவியக் கவிஞரும் கை ஏந்தி நிற்பர்
ஆயிரம் கம்பர் கூடினும் என் ஐயன்
சாயித் தமிழ் கண்டவர் மிரள்வார்!
இன்தமிழ் சுரக்கும் செம்மொழிப் புலவன்
நெஞ்சினில் இன்று கலவரம் கண்டேன்
வியாசன்போல் அதை வாசித்தேன்
கரிமுகன் மற்றைக் கொம்பை யாசித்தேன்
ஐயன் மனவலி ஆற்றுப் படையாக
சாயி மைந்தன் வரையும் தமிழ்விடு தூது!

**எனக்குள் இருக்கும் உயிரோடு**
**சாயிப் பிரியன் பேசுகிறேன்!**
என் உயிரே!
யோகர் உவந்தளித்த யோகமலரே!
உயிராய் எனக்குள் உலவும் தேவி!
நீ இல்லை என்கிறார் மெய்தானா!
என் தேகம் இன்னும் சாயவில்லை
செயல் இழந்து புலன்கள் ஓயவில்லை
இதயம் தன்தொழில் நிறுத்தவில்லை
சுவாசம் இன்னும் நிகழ்கிறது
அதில் உன் வாசம் மூக்கை துளைக்கிறது
நீ பேசும் செல்லத் தமிழ் சுமந்து
காற்று வந்து காதில் சொல்கிறது
எனக்குள் உயிராய் நீ இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பிரிந்தாய் என்று நான் அழமாட்டேன்!
மணி!.....மணி!...என்று என்னை
மணிக்கு மணி நூறுமுறை அழைப்பாய்!
பந்தரைப் பற்றிய முல்லைக் கொடியென
என் தோளில் தலை சாய்ந்து
செந்தமிழ் மணியே!
என் உயிர் நீயே என்பாய்!
அந்தவழி பார்த்தால்.....செத்தது நான்தானே!
உடற் போர்வையில் ஆயிரம்
நோயின் கிழிசல்கள்................
ஓர் உயிர் வாழ, ஈர் உடல் எதற்கென
உருவக் கழிவை கழற்றி வீசி
எனக்குள் உயிராய் கரைந்தாய்
உயிர் நிரந்தரமானது அழிவதில்லை
உன்னை உள்ளேய வைத்துக் கொண்டு
அறிவிலிபோல் நான் அழமாட்டேன்!

என் கண்களில் ஏன் இந்த நீரோட்டம்
நானாய் அழவில்லைக் கண்மணி!
காட்சிகள் எங்கும் தேடித் தேடி
உன்னைக் காணா விழிகள் வெதும்பி
தானாய் அழுகிறது கண்மணி!
என் தேகம் பாதி வற்றி மெலிந்தது
என் சோகம் அதற்கு பொறுப்பு அல்ல
மெய்யாய் உன் மெய் தீண்டா வெப்பில்
மெய்யுருகி தானாய் மெலிந்தது தேகம்!
நாம் ஒற்றைப் பொதிக்குள் ஈருயிர் கலவி
என் புலன்களின் புலம்பல் உருவத்தேடல்
அதை அறிந்தும் அறியா மூடரைப் போல்
நீ இல்லை என்று நான் அழமாட்டேன்!

பொய்யனையும் மெய்யனாக்கி
நற்குணசேகரரை பெற்றென்னை ஐயனாக்கி
முப்பால் புலவன் செய் தமிழென
வாழ்வியல் மெய்ப்பால் எழுதும் கவிஞனாக்கி
யாவுமாய் எனக்குள் நிறைந்தாய் நீ
இல்லை என்பது பச்சைப் பொய்
காற்றும் ஒருநாள் என் சுவாசம் நிறுத்தும்
ஒற்றைச் சிதையில் ஊர்வலம் போவோம்
அற்றைப் பொழுதில் இருவரும் ஒன்றாய்
சாயி பாத மலராவோம்!................

**கலாராஜன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யாவையும் இழப்பினும்

அப்பா நான் போறேன். நீ வா!

மீளாத நித்திரைக்கு முன்பான மீட்க முடியாத இறுதி வார்த்தைகள் இவை! அமரத்துவடைந்து விட்ட அவரை இனி இமை மூடிய விழிகளால் மட்டுமே காணமுடியும்.

உள்ளூறும் கண்ணீரில் நினைவுகள் நீராடுகின்றன.
ஒவ்வொரு மனித இதயத்தையும் ஊடுருவியிருக்கும் அவரது அழகான சிரிப்பு.
இனி நினைவில் மட்டுமே அதன் தனித்துவம் குன்றாமல் முறுவலிக்கும்.
மெய் துறந்தவர் உதிர்த்த கடைசி வார்த்தை தலைக்குள் ஊழிப்பிரளயம் நிகழ்த்திட அவரை அறிந்த மனித இனம் மெய் மறக்கும்.
நினைவுகளை நிற்கவைத்து அவர் சென்றுவிட்டார்.

இமைக்கதவுகளை உடைத்துப் பெருகின்றது கண்ணீர் அலை.
சாயி மீது அவர் வாழும் வரை வைத்திருந்தது அளப்பரிய பக்தி.
சாயிப்பிரியன் மீது அவர் சாகும் வரை கொண்டிருந்தது அபரிமிதமான காதல்.
உற்றார் உறவினர் ஆன்றோர் சான்றோர் நண்பர் சுற்றம் சூழல் ஓம்ப வாழ வேண்டும் என்ற அவரது அன்பு மிக்க கணவரின் ஆழமான போதனையை சிக்கென பிடித்தார். - ஓங்கினார்!

மருத்துவர்கள் அவருக்கு காலக்கெடு விதித்திருந்த நிலையிலும் பாசம்மிகு கணவரது நேசம்மிகு பாரமரிப்பைப் பார்த்து அவரைப் பீடித்த வருத்தமே வருந்தியிருக்கும்.

இருண்ட சொற்கள் அவரிடமிருந்து வராமலிருந்ததற்கு உயர் தரமான அவரது கணவரின் ஒளிமயமான சிந்தனையே காரணம் என்பது ஊரறிந்தது.
எளிமை மிக்க உருவம் எவரையும் கடிந்து கூறாத நல்லியல்பு எவர்க்கும் உதவ வேண்டும் என்ற கோட்பாடு நன்றே செய் அதனை இன்றே செய் என்ற நன்னெறி என்பன அவரை அடையாளப்படுத்தி மனதில் நிலைக்கும்.
சாந்தமும் அமைதியும் புன்னகைக்கு குறைவிலாத திருவதனமும் கேட்போரை இன்புறுத்திய இனிய பொருள் பொதிந்த நிதானமான சொல்லாட்சியும் அவரது நினைவுடன் எம்முள் வாழும்.

Beautiful Smile என உயிர் பிரிந்த வேளையில் அவரை பராமரித்த தாதி பிரண்டா மனதாரக் கூறியது இறுதிச் சான்றிதழாக என்றும் எங்கும் மாறாது மனதில் அழகாகப் புன்னகைக்கும்.

வாழ்நாள் முழுவதும் பல நல்ல குணவியல்புகளுடன் வாழ்ந்து குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் இனியவராகத் திகழ்ந்தவர் மறைந்தார்.

அந்த இல்லத்தரசி அவரது கணவரின் இதயத்தில் மட்டுமல்ல.. சமூகத்திலும் மங்காது ஒளிர்வார்.
யாவையும் இழப்பினும்...

**பொதிகை எஸ். ஜெகதீசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுச் சூரியன்

அம்மா...
அவர் ஒரு இரவுச் சூரியன்..!
என்னையும் அவர்கள் வீட்டில் மகனாக்கியது
அவர்களின் பரந்த மனத்தின் வெளிப்பாடு
ஒரு காலத்தில் பாட்டும் கும்மாளமுமாக
அவர்கள் வீட்டில் பொழுதுகள் போனதுண்டு
அப்பொழுதெல்லாம்...
அவர் அம்மா என்ற இடத்தையும்
தாண்டி வீட்டில்
அரசாங்கம் நடத்திக் கொண்டிருப்பார்
எல்லோருக்கும் அம்மா உண்டு
ஆனால் எல்லா அம்மாக்களையும்
போலல்ல இந்த அம்மா
ஒருமுறை வானொலியில்
"எடியே சின்னத்தங்கச்சி!
நீ என்ன இஞ்ச தியேட்டருக்குள்ளை இருந்து
படமா பார்க்கிறாய், அங்கை குழந்தை பாலுக்கு அழுகுது"
என்று தியேட்டரில் லைற்றைப் போட்டு
படத்தை நிறுத்தி அட்டகாசம் பண்ணும்
அந்த அற்புதமான வாழ்க்கை
இங்கை யாருக்கும் இருக்காது!
நல்ல வாழ்க்கை வாழ்ந்து,
நல்ல வாழ்க்கையை வாழப்பண்ணி
வாழ்க்கையில் ஓய்வு பெறுவது
எல்லோருக்குமானது அல்ல!
எழுத எண்ணம் வந்தபொழுது
முதல் வந்து விழுந்த சொல்
அவர் ஒரு இரவுச் சூரியன்!
பகல் மட்டுமல்ல
அவர் எப்பவும்
எல்லோருக்கும் அம்மா!
ஆன்மா சாந்தியடையட்டும்!
ஓம் சாய்ராம்!

**இளையபாரதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைத்தக்க மாண்புடையாள்!

எமது நண்பன் மணிசேகரனின் அம்மாவும் அன்பிற்குரிய ஐயா சாயிப்பிரியன் அவர்களின் துணைவியாருமாகிய திருமதி யோகாம்பிகை துளசிகாமணி அவர்களின் இழப்பு அக்குடும்பத்தைச் சார்ந்த அனைவரையும் ஆழத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அம்மாவின் பிரிவால் துயருந்நிருக்கும் அனைவருடனும் எமது இரங்கலையும் ஆறுதலையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஐயா சாயிப்பிரியன் அவர்களுக்கும் மூன்று ஆண் குழந்தைகளுக்கும் மனைவியாகவும் தாயாகவும் வாழ்ந்து தன் கடமைகளைச் செவ்வனவே செய்த அம்மையார் இவர்.

அரசியலிலும் சமூகசேவைகளிலும் ஈடுபாடு கொண்ட கணவரோடு இணைந்து குடும்பவாழ்வைக் கொண்டு செல்வது எளிதான செயல் அல்ல. பல்வேறு நட்புகளும் தொடர்புகளும் கொண்ட சாயிப்பிரியன் அவர்களின் வீடு எப்போதும் உறவுகளால் நிறைந்திருக்கும். கணவர் தொடர்பாலும் குடும்ப உறவுகளாலும் அவ்வப்போது நிறைந்திருக்கும் இல்லத்தை நேர்த்தியாகப் பராமரித்துச் செல்வது எளிதானதல்ல.

அம்மா அவர்கள் இல்லப் பொறுப்பை முழுமையாக ஏற்று, சிறு குறையும் இல்லாமல் உயர்ந்த இல்லாளாகத் திகழ்ந்தவர். பெற்றநெடுத்த மூன்று ஆண் பிள்ளைகளையும் ஒழுக்கம் குன்றாமல் வளர்த்து, கல்வியில் சிறக்கச் செய்ததில் ஒரு தாயாக தன் பங்களிப்பை முழுமையாக வழங்கியவர்.
பிள்ளைகள் மூவரும் தாய் மீது கொண்டிருக்கும் தீராத பாசம் அந்தத் தாய்மையின் உயர்வை சிறப்பித்து நிற்கின்றது.

சாயிப்பிரியன் - யோகா என்ற இந்த இணையரோடு, நெருங்கிப் பழகும் வாய்ப்பு கனடாவில்தான் கிடைத்தது. இந்த இருவருக்கும் இடையே இருந்த அன்பின் பிணைப்பு எளிதில் பிறவிடங்களில் காண முடியாதவொன்றாக இருந்தது.

வார்த்தைகளும் இன்றி, குறிப்புகளும் இன்றி ஒருவர் தேவையை மற்றவர் உணர்ந்து ஆற்றவது இந்த இருவரிடையேயும் இயல்பாக நிகழ்ந்தது. எத்தனை பேர் கூடியிருந்த நிகழ்வாக இருந்தபோதும் ஒருவரையொருவர் கவனிக்கத் தவறுவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதுமை நெருங்கும் வேளையில், ஒருவருக்கொருவர் எப்படித் துணையாக வாழ்வது என்பதற்கு இருவரும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள்.

அம்மாவின் மறைவின் பின் அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது சாயிப்பிரியன் ஐயா அவர்கள், தான் எழுதி வைத்திருந்த பல கவிதைகளை எம்மிடம் காட்டினார். ஆத்மார்த்தமான நெருக்கமின்றி, இவ்வாறான கவிதைகளை எழுத முடியாது. ஒரு உண்மையான பக்தனுக்கும் கடவுளுக்குமான நெருக்கம் அந்தக் கவிதைகளில் இருந்தது. ஐயா அவர்களை முழுதாக ஆட்கொண்டிருந்த அம்மாவின் அருள் மிக்க ஆளுமை பெருவியப்பை ஏற்படுத்தியது.

இன்றும் தன் மனைவியை உயிருக்குள் வைத்து உருகிப் போற்றும் அன்பு உருவாகவே ஐயா வாழ்ந்து வருகின்றார்.


ஒரு இல்லத்தைச் சிறப்புறச் செய்வது இல்லத்தாளே. இல்லத்தை ஆள்பவள் அவளாகவே இருப்பாள். அந்த ஆட்சியை, ஆளுமையை எல்லோராலும் உச்சம் தொடும் அளவுக்குச் செய்ய முடிவதில்லை.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்ற வள்ளுவர் குறளைப் பொருள் குன்றாமல் வாழவைத்த பெருந்தகை யோகாம்பிகை அம்மா அவர்கள்.

அம்மாவின் ஆன்மா எங்கும் பரவி எல்லோரையும் வாழ வைக்கட்டும்.

## பொன்னையா விவேகானந்தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கசுமங்கலி

சிலவேளைகளில் சில நிகழ்வுகள் எங்கள் நினைவுள் புகுந்து எரிமலையாய் ஆர்த்தெழுந்து அசுரப் பரிமாணமாக வளர்ந்து விடுவதுண்டு.

2018 மார்ச் மாதம் 24ம் திகதி, இதனை என்னால் உணர முடிந்தது.

அன்று ஒரு சனிக்கிழமை. மதியத்துக்குச் சற்று முன் அல்லது பின்னராக இருக்கலாம். தொலைபேசி மணி ஒலியெழுப்ப, அது நண்பர் துளசிகாமணி (ஸாயிப்ரியன்) அவர்களின் அழைப்பு என்பதைத் தெரிந்து வழக்கமான பாணியில் நான் உரையாடலை ஆரம்பிக்கிறேன்.

மறுமுனையில் பழக்கப்பட்ட அந்த ஆர்ப்பரிப்பு காணப்படவில்லை. சொற்கள் கட்டுக்குள் நிற்காது, யோகம்... சாயி... பதம் என்று ஒன்றோடொன்று தொடர்பற்று அவரது குரல் சொற்களை விசிறுகிறது. எதனையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

மீண்டும் அவரே தொடர்கிறார்... "மனைவி யோகம் பதினொரு மணியளவில் சாயி பதம் பற்றிவிட்டார்" என்று ஆறுதலாகச் சொல்லி அமைதி பேணுகிறார்.

நான் சில கணங்கள் விறைத்துப் போனேன். காதுகள் செவிடாகியது போன்ற உணர்வு.

அன்று காலை மனைவிக்குக் கஞ்சி ஊட்டியதிலிருந்து, அவர் அருகழைத்துக் கூறிய வார்த்தைகளை மீட்டுக் கூறி, அவரது இறுதி மூச்சு நின்றது வரையான அனைத்தையும் மெதுவாக அவரே சொல்கிறார். சொல்பவர் அவர்தானா என்ற கேள்விக்குறியுடன் அந்த உரையாடல் நிறைவு பெறுகிறது.

எனக்கும் நண்பர் துளசிக்குமிடையிலான சுமார் ஐம்பது ஆண்டுகால நட்புறவில், இது முற்றிலும் வித்தியாசமான ஓர் அனுபவம் எனக்கு.

ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக தனது சுகம், நலம் அனைத்தையும் துறந்து, வெளியுலக தொடர்புகளைத் துண்டித்து, சொந்த ஆசாபாசங்களை மறந்து மனைவி அருகே இருந்தும் கிடந்தும் பணிவிடை செய்த அந்தக் கணவர் இந்த இழப்பை (எதிர்பார்த்திருந்ததாயினும்) எவ்வாறு தாங்கிக் கொண்டு அந்தத் தகவலை அவரே எனக்குத் தெரிவித்தாரென்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ஆனால், இதுவே எங்கள் நட்பின் ஆழத்தைப் புரியவைத்தது.

மறைந்துவிட்ட சகோதரி யோகாம்பிகைக்கும் அவரது கணவர் பிள்ளைகளுக்கும் எங்கள் குடும்பத்துக்குமிடையேயான உறவு நீண்ட காலமுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் அவரை எவ்வாறு நாம் புரிந்து கொண்டோம் என்பதை நினைத்துப் பார்க்கும் நேரமிது.

எந்தத் துன்பம் வந்தவேளையிலும் அந்தச் சிரிப்பு - அது தூய்மையானது, உண்மையானது.

தமது கணவரின் நண்பர்களை தமது குடும்ப உறவுகளாக நேசித்துப் பாசம் பொழியும் அந்த இங்கிதம் எல்லோருக்கும் இலகுவில் வர முடியாதது - அது ஆத்மசுத்தியானது.

கணவர் தமது நண்பர்களோடு உரையாடும் ஒவ்வொரு வேளையிலும் தாமும் அதில் பங்குபற்றி அதனை விரிவுபடுத்தும் ஆற்றல் அபரிமிதமானது - அது பக்குவமானது.

விருந்தோம்பல் அவரது தலையாய பண்புகளில் முதலானது. அதனை அவர் இல்லம் சென்ற ஒவ்வொருவரும் அனுபவத்தால் கண்டதுண்டு. 1974ல் கொக்குவி-லில் அவர்கள் நிர்மாணித்த இல்லத்தின் குடிபுகுதல் நிகழ்வுக்கு நாம் கொழும்பிலிருந்து சென்றிருந்த மூன்று நாட்களும் எம்மை அங்கிங்கு அசைய-விடாது தங்க வைத்து வழங்கிய உபசரிப்பில் திக்குமுக்காடியவர்கள் நாம்.

கூடிப்பழகியவர்களுக்கு இவர் பன்முக உறவுக்காரர். சிலருக்கு அக்கா, சிலருக்கு அண்ணி, சிலருக்கு அம்மா. வேறு சிலருக்கு பெற்ற தாய்க்கு நிகரான ஓர் அன்னை. தாங்களே இவரின் மூத்த மகனென்று உரிமை கொண்டாடும் பலர் இன்றும் எம்முடன் வாழ்கின்றனர். இது அவரது அன்பின் அரவணைப்பால் கிடைத்த உறவு எனலாம்.

2009ல் வன்னியில் யுத்தம் முனைப்புப் பெற்றிருந்த வேளையில், ஒட்டாவா நாடாளுமன்ற முன்றலில் தேசப்பற்றாளர் துளசிகாமணி அவர்கள் தாமாகவே உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இது திடீரென்று எடுக்கப்பட்ட ஒரு முடிவு. கடும் குளிர், ஊசிமுனைக் காற்று, மோசமான பனிப்பொழிவு - இவை எதனையுமே பொருட்படுத்தாது தேசப்பற்றாளர்கள் மேலும் சிலர் சேர்ந்து உண்ணாநோன்பைத் தொடருகின்றனர்.

உடல் உபாதையுள்ள கணவரின் நிலை கண்டு பரிதவித்த சகோதரி யோகாம்பிகை தாமும் உணவெதுவும் உட்கொள்ளாது தம்மை வருத்தி நிற்கிறார். "திரு, நீங்கள் சொன்னால் அவர் கேட்பார்" என்று சொல்லியவாறு என்னிடம் அவர் கேட்க வந்த உதவியைப் புரிந்து கொண்ட நான், எதுவுமே சொல்ல முடியாது கையறு நிலையில் நின்றேன். நிலைமையை அவர் புரிந்து கொண்டதால் எமக்கிடையே மௌனமொழி பேசியது.

எல்லாத் தாய்மாருக்கும் பொதுவான விருப்பம் ஒன்றுண்டு. இதில் அவர்களுக்குள் வேறுபாடு கிடையாது. தாம் 'எப்போதும்' தீர்க்கசுமங்கலியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டுமென்பதே இவர்கள் விருப்பம். 'எப்போதும்' என்பது தங்கள் வாழ்வின் இறுதிநாள் வரை என்பதையே குறிக்கிறது.


கழுத்தில் தாலியுடனும், நெற்றியில் குங்குமத்துடனும் இறுதித் துயிலுக்குச் செல்பவர்கள் பூர்வ புண்ணியம் செய்தவர்கள் என்ற தமிழர் மரபு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

திருமதி யோகாம்பிகை துளசிகாமணி அவர்கள் அனுதினமும் பகவானிடம் விரும்பிக் கேட்டவாறு தீர்க்கசுமங்கலியாகவே மீளாத்துயிலுக்குச் சென்றுவிட்டார். காலன் அழைத்தபோது தன் பிரிய கணவரைப் பார்த்து "நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ற தீர்க்கசுமங்கலியின் வாழ்வியல் நினைவுகள் அக்குடும்பத்துடன் நீண்டு நிலைத்திருக்கும்.

அன்னாரின் மறைவு தரும் தாங்கமுடியாத சோகத்தோடு, அவரது மரணத்தின் முக்கியத்துவம் இதயத்தின் நொந்த இடங்களை வாட்டுவது தெரிகிறது.

அவர் என்றுமே தீர்க்கசுமங்கலிதான்!

## திரு எஸ். திருச்செல்வம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுது வணங்கி விடை தந்தோம்
# போய் வா தாயே! சாயிபதம்!

அன்பு உறவுகளே!
பெண் தெய்வம் இங்கே
கண் உறங்குகிறது!
அழுது அரற்றி
அவள் தூக்கம் கலையாமல்
மெல்ல வாருங்கள்!
எங்கள் அம்மா கண்மலரும்
அழகுதனைப் பாருங்கள்!



பிறவிக் கடல் நீந்தி
இறைவனடி சேர்ந்தாள்
பள்ளி எழுச்சி பாடி
யாரும் துயில் எழுப்ப வேண்டாம்!

இதுவரை காணாத நிம்மதியோ
வெண்மதி போல் அழகாய்
என் தேவதை தூங்குகிறாள்!
என் கண்ணீர் துளிபட்டு
அவள் நீள்துயில்
கலைய வேண்டாம்!
அழகு மலர் உறங்க;;;;.
அன்பு நதி உறங்க;;;..
நான் பாடுகிறேன் தாலாட்டு!

உயிரே! என் உயிரே! கண்வளரு
ஏட்டில் எழுதாத காவியமே! கண்ணுறங்கு
சாயி பாதம் அலங்கரிக்கும்
என் நேசமலரே நீ தூங்கு!
தாய்மைக்கே தாயான
சாயிசக்தி கண்ணுறங்கு!

எப்பொழுதும் சிரித்த முகம்
சினந்து நான் பார்த்ததில்லை
அப்பா என்று அழைப்பாய்;.ஆனாலும்!
நான் உனக்குப் பிள்ளை!
உயிர் உறங்கும் அழகை ரசித்துக் கொண்டு
நான் அழுவதில் என்ன அர்த்தமுண்டு
தொழுது வணங்கி விடை தந்தோம்
போய் வா தாயே! சாயிபதம்.
ஓம் சாயிராம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org